# பணிநிறைவு வாழ்த்து!

திருமிகு **க. அழகேசன்** இ.வ.ப. நாள்:30-06-2023







பணியில் மகிழ்ந்து பயணம் செய்கையில்,
அணியாய் சிலரது அன்பால் நிறைவோம்!
மணியெனக் காலம் மகிழ்ந்து வளர்கையில்,
பணியில் நிறைந்து சிலர் ஓய்வும் பெற்றிட,

பயணத்தில் இளையர் சிலரும் தொடர,
மயக்குறு நிலையை மனத்தில் நீக்கி;
அயறாது தொடர்நிலை ஆற்ற முனைவர்!
தயக்கமிலாது படிப்படியாய் செம்மைகாண,

மயக்கும் வாழ்வியல் தடங்களில் நகர்ந்து,
இயக்கும் அறிவில் இன்னல்கள் நீங்கிட,
முயங்கும் வாழ்வின் முகவரி எழுதிட,
தயக்கமிலாது மனையறம் கொண்டுயர,

தங்கும் இடமாய் குடியிருப்பு அமைந்திட,
எங்கும் நிறையும் இயல் நிலையோடு,
சுங்கம் என்னும் சுடர்மிகு அமைவின்,
அங்கம் மனதினில் சூட்டிட நட்புடன்,

அடுத்து பலருடன் அணைந்து மகிழ்வோம்!
தொடுத்த வாழ்வின் அணிகலனாக நாளும்,
தொடரும் எங்கள் நட்பின் பயணம்!
அடுத்து நாங்கள் பணியில் இணைந்திடும்,

அழகிய நிலையே எங்களுள் பிறக்க,
**அழகேசன்** எனும் அருந்தவச் செல்வருடன்,
பழகிய நட்புடன் பயணம் செய்திட,
முழுகிய நினைவுகள் முகவரி எழுதிட,

மூப்பின் நிலையால் இன்றவர் காண்பதோ,
முகவரி மாற்றும் பணியின் நிறைவு!
அகமெலாம் நிறைந்து அன்புடன் வாழ்க!
மனைவி மக்களுடன் மகிழ்ந்தே எழுக!

இணையிலா அன்பின் இயற்றமிழ் செல்வ,
பிணியிலா வாழ்வுடன் பெருமை கொண்டு,
அணியாய்ப் பலவும் அடுத்தே செய்து,
இனிதாய் என்றும் வாழ **இந்நாளில் வாழ்த்து!**
அன்புடன்,

**கு.ப. அசோகன்,** 28-06-2023
மேனாள் சுங்க இல்ல மதிப்பீட்டு அதிகாரி.